


# கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் - ஜூன் 2024

தொகுதி - 3



# கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜுன் 2024

தொகுதி – 3

# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**

**செய்தித்துறையின் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி - ஆனி

**ஜூன் 2024**

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024

**தொகுதி - 3**



ஆசிரியர் - வெளியிடுபவர் : **மரு. இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் : **இரா. அண்ணா**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் : **க.அ. முகம்மது ரசூல்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள் : **எஸ். உதயா கதிரவன்**
**ப. கருணாகரன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள் : **மு. மணிமேகலை**
**சி. சுஜிதா**
**இரா. பாலாஜி**
**கு. சுபாஷ்**

நிருபர்கள் : **எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

ஓவியர் : **இரா. உமாமகேஸ்வரி**

இதழ் உதவியாளர் : **நி. ஷீலா**

கணினி வடிவமைப்பு : **தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை
அச்சுப்பிழைத் திருத்துபவர் : **கோ. சந்திரசேகர்**

இளநிலை
அச்சுப்பிழைத் திருத்துபவர் : **த. பிரியா**



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

**தமிழரசு அலுவலகம்**



எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113.
**தொலைபேசி :** 044 – 2254 2221 / 22542224
**மின்னஞ்சல் :** ddpub.tamilarasu@tn.gov.in,
**இணையதளம் :** www.tndipr.gov.in



“ நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில் இரவலாக, உன் இதயத்தை தந்திடண்ணா. நான் வரும்போது கையோடு அதை, உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா. ”

- முத்தமிழறிஞர்
**கலைஞர்** அவர்கள்

# பொருளடக்கம்


- முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்க்கைப் பயணம் .................... 7
- முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் அமைப்பது பற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு .................... 25
- முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தல் .................... 33

# பொருளடக்கம்


- முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் உருவாக்கம் ........ 39
- முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சி........ 59
- பத்திரிகைகளின் பார்வையில் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தைப் பற்றிய கருத்துக்கள்........ 74
- முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தைப் பற்றிய புகைப்படத் தொகுப்பு........ 92
- பொதுமக்கள் பார்வையில் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம்........ 108


❖ ❖ ❖


முத்தமிழறிஞர் கலைஞர்
பொது வாழ்வில்
கடந்து வந்த பாதை...

# முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்க்கைப் பயணம்...



**1924** சென்னை மாகாணத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்த திருக்குவளையில் திரு. முத்துவேலர் அவர்களுக்கும், திருமதி அஞ்சுகம் அம்மையார் அவர்களுக்கும் மகனாய் பிறந்தவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

**1938** திருவாரூர் உயர் நிலைப்பள்ளியில் பயின்ற பொழுது 'வாருங்கள் எல்லோரும் இந்திப் போருக்கு' என அழைத்து தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போரைத் துவங்கினார்.

**1941** மாணவர் மன்றம் என்கிற அமைப்பைத் துவங்கி அதன் தலைவராக செயல்பட்டார். அந்த மன்றமே திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அணி என்கிற சிறப்பைப் பெற்றது.

**1942** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் உயிரினும் மேலாக கருதிய அறிஞர் அண்ணா அவர்களுடனான முதல் சந்திப்பு நடைபெற்றது.

கலைஞர் அவர்கள் மூத்த பிள்ளையாக வளர்ந்து திராவிட இயக்கத்தின் கொள்கை முரசாக விளங்கி வரும் 'முரசொலி' நாளிதழ் மாத இதழாக தொடங்கப்பட்டது.



**1944** பேபி டாக்கீஸ் என்று அழைக்கப்பட்ட திருவாரூர் கருணாநிதி திரையரங்கில் தன்னுடைய முதல் நாடகமான 'சாந்தா (அல்லது) பழனியப்பன்' நாடகத்தை அரங்கேற்றினார்.

**1945** பெரியாரின் 'குடியரசு' வார இதழின் துணை ஆசிரியராக பணியாற்றினார்.

**1946** முதல் திரைப்படமான 'இராஜகுமாரி' க்கு கதை வசனம் எழுதினார்.

**1949** சென்னை ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் துவங்கினார்.. அண்ணாவின் படைத் தளபதியாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தி.மு.கழகத்தின் பொதுக்குழு மற்றும் பிரச்சாரக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**1951** திரைப்படப் பணி, கட்சிப்பணி ஆகியவற்றிற்கு இடையேயும் பத்திரிகைத்துறையில் தீராக் காதல் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'மாலைமணி' இதழின் ஆசிரியராக பொறுப்பேற்றார்.

சென்னையில் நடைபெற்ற தி.மு.கழக முதல் மாநில மாநாட்டின் இரண்டாம் நாள் அறிஞர் அண்ணா அவர்களே வியக்கும் வகையில் சொற்பொழிவாற்றினார்.

**1953**

நெசவாளர்களின் துயர்துடைக்க – தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை, சென்னையில் தோளில் சுமந்து வீதி வீதியாக சென்று விற்றார்.

வடநாட்டு தொழில் அதிபரின் பெயரில் அழைக்கப்பட்டு வந்த டால்மியாபுரம் என்பதைத் தமிழில் கல்லக்குடி எனப் பெயர் மாற்றம் செய்யக்கோரி போராட்டம் நடத்தியதால் கைது செய்யப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 6 மாத கால சிறைவாசத்திற்கு உள்ளாக்கப்பட்டார்.

பொதுத்தேர்தலில் திருச்சி மாவட்டம் குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டு முதல் முறையாக சட்டமன்றத்தில் நுழைந்தார்.





சட்டமன்ற உறுப்பினராக தன்னுடைய முதல் உரையில் நங்கவரம் விவசாயிகளின் போராட்டம் பற்றி எடுத்துரைத்தார்.

**1960** திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகத் தலைமைக் கழகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1962** சட்டமன்றத் தேர்தலில் தஞ்சைத் தொகுதியில் வெற்றி பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1963** கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது, தமிழ் மொழியைக் காத்திட தலைமைக் கழகத்தால் இந்தி எதிர்ப்புப் போராட்டக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**1964** சென்னை மாநகராட்சித் தேர்தல் பணிக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்று வெற்றிகண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பாராட்டி நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கணையாழிப் பரிசளித்தார்.

**1965** மொழிப்போர் போராட்டத்தின் பொழுது இந்திய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

**1966** கட்சிப்பணி, மொழிப்போர், சிறைவாசம் போன்ற பல இன்னல்கள் இருந்தபோதும் தன்னுடைய 'காகிதப்பூ' எனும் நாடகத்தை அரங்கேற்றினார்.

**1967** சென்னையில் நடைபெற்ற தி.மு.க. 4ஆவது மாநில மாநாட்டில், பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ரூ.11 இலட்சத்தை தேர்தல் நிதியாக வழங்கி பிரம்மிக்க வைத்தார்.





சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதன்முறையாக அமைக்கப்பெற்ற தி.மு.கழக ஆட்சியில் அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

**1969** அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து சட்டமன்றக் கட்சித் தலைவராக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவோடு கலைஞர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சராகப் பதவியேற்றார்.

**1971** சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராக இரண்டாம் முறையாகப் பொறுப்பேற்றார்.

**1973** பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்கள் மறைந்த பொழுது, சட்டத்தில் இடமில்லை என்ற போதும் அரசின் அறிவிக்கையாக வெளியிட்டு தனது ஆசான் பெரியார் அவர்களின் உடலை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ய ஆணை பிறப்பித்தார்.

**1974** சுதந்திர தினமான ஆகஸ்டு 15 அன்று கோட்டைக் கொத்தளத்தில் மாநில முதல் அமைச்சர்கள் தேசியக் கொடி ஏற்றும் உரிமையை மத்திய அரசிடம் போராடிப் பெற்றுத் தந்தார்.

**1977** சட்டமன்ற தேர்தலில் அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார்.

**1979** தமிழை மத்திய ஆட்சி மொழியில் இணைக்கக்கோரி கறுப்புக் கொடி ஊர்வலமும், கழகத் தோழர்கள் இல்லங்களில் கறுப்புக் கொடி ஏற்றிடவும் செய்தார்.

**1981** ஈழத் தமிழர் நலனுக்காக போராடியதற்குப் பரிசாய் மாநில அரசு கலைஞர் அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தது.

**1983** இலங்கையில் நடைபெற்ற ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை துச்சமென எண்ணி தூக்கியெறிந்தார். இன்று வரையில் ஈழத்தமிழருக்காக பதவியை துறந்த ஒரே தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மட்டுமே என்றால் அது மிகையல்ல.

**1986** இந்தி மொழி திணிப்பை எதிர்த்துப் போராடி அரசியல் சட்டத்தின் 17ஆவது பிரிவை எரித்ததால் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றார்.

**1987** திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகமாக விளங்கிவரும் அண்ணா அறிவாலயத்தைத் திறந்து வைத்து கழகத்திற்கு அர்பணித்தார்.



**1989** தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் துறைமுகம் தொகுதியில் மாபெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3ஆவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

சமூக நீதிக் காவலராக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த பொழுது மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு 20 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார்.

ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் அனைத்து விதங்களிலும் சம உரிமைகள் வழங்கி, பெண் அடிமைத்தனத்தை ஒழித்து புரட்சி ஏற்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்களுக்குச் சொத்தில் சமஉரிமை தரும் சட்டத்தை நிறைவேற்றி பலரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

**1990** தென்பாண்டிச் சிங்கம் நூலுக்காகத் தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்தின் 'மாமன்னன் இராஜராஜன் விருது மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், அவர் தங்கப் பேனா ஒன்றைப் பரிசாக அளித்து, முத்தமிழறிஞர் எனப் பட்டம் வழங்கினார்.

மலைவாழ் மக்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய 1 சதவிகித இடஒதுக்கீட்டினால் தமிழகத்தில் மொத்த இடஒதுக்கீடு 69 சதவிகிதமாக உயர்ந்தது.

கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி மண்டல் கமிஷன் அறிக்கை ஏற்கப்பட்டு மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**1991** திரு. சந்திரசேகர் அவர்களின் தலைமையிலான மத்திய அரசு தவறான குற்றச்சாட்டை சுமத்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசைக் கலைத்தது.

**1996** தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்ற கலைஞர் அவர்கள் 4ஆவது முறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆனார்.

**1997** தி.மு.கழக அமைப்புகளுக்கு நடைபெற்ற 10ஆவது தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏழாவது முறையாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவில் முதல் "தகவல் தொழில்நுட்பக் கொள்கை" வழங்கினார் தொலைநோக்காளர் கலைஞர்.

ஊரும் சேரியும் பிரிந்து கிடப்பதை ஒழிக்க வேண்டும் என்ற பெரியாரின் கனவை நினைவாக்கும் வகையில் " சமத்துவபுரம்" உருவாக்கினார், ஊரக வளர்ச்சியை ஊக்குவிக்க "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", நமக்கு நாமே திட்டம் தொடங்கப்பட்டது.

**1999** பல்லாயிரம் ஆண்டு வரலாறு கொண்ட தமிழ் மொழியின் எதிர்காலம் இனி இணையத்தில் உள்ளது என்ற தொலைநோக்கு பார்வையுடன் 'தமிழ்நெட் 99' மாநாடு. தமிழ் இணைய மாநாடு நடத்தினார்.

**2000** முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் சாதி, மத, இன, வேறுபாடு அற்ற உலகப் பொதுமறையாம் திருக்குறள் கொடுத்த 'அய்யன் திருவள்ளுவர் சிலை' நிறுவி, தமிழர் தத்துவத்தை உலகுக்கு பறைசாற்றினார் கலைஞர்.

தி.மு.கழகத்தின் 11ஆவது பொதுக்குழுவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 8ஆவது முறை தலைவராகத் தேர்வு.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு தலைசிறந்து விளங்குவதற்கு அடித்தளம் அமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதில் ஒரு பகுதியாக தரமணியில் "டைடல் பார்க்" திறந்தார் கலைஞர்.





**2001** செல்வி ஜெயலலிதா அவர்களின் ஆட்சியில் நள்ளிரவில் மனிதாபிமானமற்ற முறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டார்.

**2003** 12ஆவது தி.மு.கழக அமைப்புகளுக்கானத் தேர்தலில் 9ஆவது முறை தலைவராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேர்வு.

**2003** அண்ணா அறிவாலயத்தில், 'கலைஞர் கருவூலம்' காட்சி அரங்கினை உருவாக்கி, அதனை முன்னாள் மாண்புமிகு குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்களைக் கொண்டு திறக்கச் செய்தார்.

**2005** தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல மற்றுமொரு முயற்சியாக, பாரதியார் காலம் தொட்டு தமிழ் மக்களின் பெரும் கனவாக இருந்து வந்த "சேது சமுத்திரத் திட்டம்" தொடக்கம்.



**2006** சட்டமன்றத் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றி–முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது சொந்த மண்ணான திருவாரூரில் அமோகமாக வென்று 5ஆவது முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆனார்.

தேர்தல் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றும் வண்ணம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், ரூ.7 ஆயிரம் கோடி விவசாயிகள் கூட்டுறவுக் கடன் இரத்து, கிலோ அரிசி ரூ.2 திட்டம் என மூன்று திட்டங்களுக்கும் பதவியேற்பு விழா மேடையிலேயே கையொப்பமிட்டு ஆணை பிறப்பித்தார்.

பெரியார் நெஞ்சில் நீங்காமல் தைத்திருந்த முள்ளை அகற்றும் விதமாக "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்!" தீர்மானத்தின் முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “காமராஜர் பிறந்தநாள்! கல்வி வளர்ச்சி நாள்!” என அறிவித்தார், அத்துடன் ஏழை, எளிய பிள்ளைகள் ஊட்டச்சத்துடன் கல்வி கற்க “சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை” திட்டம் தொடங்கினார்.

பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைக்க, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தை அறிவித்தார்.

**2006** இந்திய உபகண்டத்தில் தமிழினத்திற்கானத் தனி நிலமாக “தமிழ்நாடு மாநிலம்” அமைந்த 50 ஆம் ஆண்டு பொன்விழா! சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, சென்னையில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் அமைக்க ஒப்புதல் தெரிவித்துமத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் கடிதம்.

**2007** தமிழ்நாட்டின் உயிர்நாடி பிரச்சினையான காவிரி நதிநீர் பங்கீடு குறித்து அயராது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போராடியதன் விளைவாக பெற்ற “காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு” அளித்தது.

அரை நூற்றாண்டுக்காலம் தமிழ் மக்களின் பிரதிநிதியாக அயராது உழைத்த சாதனையாளருக்கு “சட்டமன்றப் பணியில் கலைஞர் பொன்விழா!”

நமது மொழியைப் புதிய நோக்குடன் ஆய்வுகள் மூலம் மேலும் செழுமைப்படுத்த ,சென்னையில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தொடக்கவிழா.

சிறுபான்மையினர் நலன் மீது என்றும் மாறாத அக்கறை கொண்ட தலைவர் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு அவசர சட்டம் இயற்றினார்

ரூ.9,757 கோடியில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்தது, கலைஞரின் அறிவுரைப்படி




10.06.2009 அன்று துணை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

**2008**

உலகத்தமிழரின் ஒப்பற்றத் திருநாளாம் தை முதல் நாளை தமிழ் புத்தாண்டு நாள் என சட்டம் நிறைவேற்றம்.

தருமபுரி மாவட்ட மக்களின் நெடுநாள் கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார் கலைஞர்.

**2008**

நீர் வளத்தை மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் சமமாக பெறும்வகையில் மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு கலைஞர் அடிக்கல் நாட்டினார்.

மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தில் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை நிறுவ, சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் அளித்தார்.

திருமணமாகாத 50 வயது கடந்த பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தொடக்கம்.

அண்ணா நூற்றாண்டு விழாவில் இந்தியாவிலேயே முதல் முறையாக, ஏழை எளிய மக்களின் பசிப்பிணி நீக்க, உணவுக்காக எவரும் எவரிடமும் கையேந்தா வண்ணம் 1 கிலோ அரிசி 1 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அண்ணா நூற்றாண்டு விழாவில் "பெரியார் விருது" அவரது கொள்கைகளை சட்டமாக்கி நிறைவேற்றி வரும் சுயமரியாதைக்காரர் கலைஞர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தி.மு.கழகத்தின் 13ஆவது பொதுக்குழுவில், பத்தாவது முறையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

**2009** அருந்ததி இன மக்களுக்கு கல்வியில், வேலை வாய்ப்பில் 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றினார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக, அவர்கள் மீது நடத்திய கொலைவெறித் தாக்குதலை தடுக்கக் கோரி, தனது உடல்நிலையை துச்சமாக மதித்து அண்ணா நினைவிடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

மகத்தான நோக்கத்துடன் கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடக்கம்.

**2009** காஞ்சியில் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 'அண்ணா விருது' வழங்கப்பட்டது.

**2010** சாதி, மதம், ஏழை, பணக்காரன் பாகுபாடின்றி குழந்தைகள் அனைவருக்கும் சமமான "சமச்சீர் கல்வி" அறிமுகம் செய்தார்.

நவீன சமூகத்தின் சிற்பியான தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகம் திருமதி சோனியா காந்தி அவர்களின் தலைமையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களால் திறக்கப்பட்டது.

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு, மொத்த உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் பிரம்மாண்டமாக கோவையில் நடத்தப்பட்டது.

தெற்காசியாவின் மாபெரும் நூலகமான “அண்ணா நூற்றாண்டு நூலகம்” திறப்பு விழா.

தமிழரின் பெருமைமிகு அடையாளத்தை கொண்டாடும் நோக்கில் மாமன்னன் இராசராச சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் ஆயிரமாண்டு விழா நடத்தினார்.

சென்னை அண்ணா மேம்பாலம் அருகே கதீட்ரல் சாலையில் செம்மொழிப் பூங்கா அமைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**2011** அடையாறு பகுதியில் பசுமையான சுற்றுசூழலை உருவாக்க தொல்காப்பியப் பூங்கா அமைக்கப்பட்டது.

**2013** தனது 90ஆவது வயதிலும் டெசோ அமைப்பின் சார்பில் தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

**2016** திருவாரூர் தொகுதியில் 68 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 13ஆவது முறையாக வெற்றி பெற்றார்.

உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதி.

பீனிக்ஸ் பறவை போல உடல் நலம் தேறி இல்லம் திரும்புதல்

**2017** அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்கள் கோபாலபுரம் இல்லம் வந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கண்டு உடல் நலம் விசாரித்தார்.

மாண்புமிகு இந்திய பிரதமர் திரு. நரேந்திரமோடி, கோபாலபுரம் இல்லம் வந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, உடல்நலம் விசாரித்தார்.

**2018** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடல்நலன் பின்னடைவு ஏற்பட்டதாக மருத்துவமனை அறிக்கை.

ஓய்வின்றி உழைத்த அந்த உதயசூரியன் நம்மை விட்டு மறைந்தார். கோடானகோடி உடன்பிறப்புகளின் உள்ளங்களில் திராவிட இனத்தின் காவலனாக, முத்தமிழ் காத்த தலைமகனாக நிறைந்து வாழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடல் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் அடக்கம் செய்ய அன்றைய ஆளும் கட்சியினரால் மறுக்கப்பட்டது. மிகுந்த சட்டப் போராட்டத்திற்குப் பின் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்திலேயே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு நினைவிடமானது.




முத்தமிழறிஞர்
கலைஞருக்கு
நினைவிடம் அறிவிப்பு...

# அறிஞர் அண்ணா நினைவிட வளாகத்தில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் அமைத்தல் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் விதி 110இன்கீழ் அறிக்கை – 24.08.2021

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அரசின் முதல் அறிவிப்பினை உங்கள் அனுமதியோடு இந்த அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன். விதி 110இன்கீழ் அறிவிக்கும் முதல் அறிவிப்பே 'தமிழினத் தலைவர்'– 'முத்தமிழறிஞர்' – 'எண்பதாண்டு காலம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு உழைத்தப் போராளி' கலைஞர் அவர்களது புகழுக்குப் பெருமை சேர்க்கும் அறிவிப்பாக அமைந்துள்ளதை நினைத்து நான் மட்டுமல்ல, இந்த அரசே பெருமைப்படுகிறது.

உலகெங்கிலும் தமிழர்களுக்கெல்லாம் தமிழினத் தலைவர், இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் முத்தமிழறிஞர், கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கு எல்லாம் தலைவர், இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி, இந்த அவைக்கு என்றும் நிரந்தர உறுப்பினர், எங்களையெல்லாம் உருவாக்கியத் தலைவர், கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் உள்ளத்தில் குடியிருக்கும் மாண்பாளர். இது மட்டுமல்ல; இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்! "என் பாதை, சுயமரியாதைப் பாதை - தமிழின நலன் காக்கும் பாதை - தமிழ் நெறி காக்கும் பாதை - தந்தைப் பெரியாரின் பாதை - பேரறிஞர் அண்ணாவின் பாதை - அறவழிப் பாதை - அமைதிப் பாதை - ஜனநாயகப் பாதை - இதில் பயணித்தால் மரணமே வரும் எனப் பயமுறுத்தினாலும்,



அந்தப் பாதையிலிருந்து மாற மாட்டேன்" என்று இறுதிவரை உறுதியோடு வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள்.

எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தினுடையத் தலைவர் என்று வாழ்ந்த காலம் முழுவதும் வரலாறாக வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் அவராக மட்டும்தான் இருக்க முடியும். குளித்தலையில் போட்டியிட்டு 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் குனியாத தலை, கலைஞருடைய தலை. 1957, 1962, 1967, 1971, 1977, 1980, 1989, 1991, 1996, 2001, 2006, 2011, 2016 என மொத்தம் 13 முறை இந்தச் சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி வாகை சூடிய வெற்றி நாயகர் கலைஞர் அவர்கள். தோல்வி அவரைத் தொட்டதே இல்லை! வெற்றி அவரைக் கைவிட்டதே இல்லை! அவர்தான் கலைஞர்!



இந்தியாவில் இப்படி ஒருவர் இருந்தது கிடையாது; இனி ஒருவர் அவர் இடத்தை அரசியல் களத்தில் பிடிக்க முடியாது என்று போற்றத்தக்கப் பெருமையுடையவர் கலைஞர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு 10.02.1969 அன்று முதன்முதலில் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அதன்பின்னர், 15.03.1971, 27.01.1989, 13.05.1996, 13.05.2006 என மொத்தம் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழ்மொழியின் மேன்மைக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய மக்களின் கல்வி, அறிவியல், சமூகப் பொருளாதார அரசியல் எழுச்சிக்கும் வழிவகுக்கும் மகத்தானத் திட்டங்களையும், சட்டங்களையும் உருவாக்கி, ஒட்டுமொத்த இந்தியாவிலும், தமிழ்நாட்டை வளர்ச்சி பெற்ற முன்னணி மாநிலமாக்கியதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பங்கு ஈடு இணையற்றது.

இன்று நாம் பார்க்கும் நவீனத் தமிழ்நாடு என்பது கலைஞர் உருவாக்கியத் தமிழ்நாடு ஆகும். கனவு நகரங்களைச் சிலர் உருவாக்குவார்கள். கலைஞர் அவர்கள்தான், கனவு மாநிலத்தையே



உருவாக்கிய மகத்தான சிற்பி. "நான் முதலமைச்சராகக் கோட்டையில் இருந்தாலும், அங்கிருந்தபடியே குடிசைகளைப் பற்றியே சிந்திப்பவன்" என்று முதல் முறை ஆட்சிக்கு வந்த போது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். 'சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு, வளர்ச்சிப் பணிகள், சமதர்ம நோக்கு' இவை மூன்றையும்தான் தன்னுடைய ஆட்சியின் இலக்கணமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் ஆட்சியை நடத்தினார்கள். அனைத்துத் துறைகளும் ஒருசேர வளர்ந்தன.



அன்னைத் தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதி; ஒன்றிய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு உரிமை; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம்; மகளிருக்குச் சொத்தில் சம உரிமை என்ற சட்டம்; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்; விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்; கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடிக் கடன் இரத்து; சென்னைத் தரமணியில் டைடல் பார்க்; சென்னைக்கு மெட்ரோ இரயில் திட்டம்; சிப்காட், சிட்கோ, தொழில் வளாகங்கள் உருவாக்கம்; தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது; நமக்கு நாமே திட்டம்; அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; அவசர ஆம்புலென்ஸ் 108 சேவை அறிமுகம்; இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; மினி பஸ்களை கொண்டு வந்தது; உழவர் சந்தைகள் அமைத்தது; ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி; கைம்பெண்கள் மறுமண நிதி உதவி; கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்; பல்லாயிரம் கோயில்களுக்குத் திருப்பணிகள்;

அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு; உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்காக 33 விழுக்காடு இடஒதுக்கீடு; இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குதல்; மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்; அனைவரும் இணைந்து வாழ சமத்துவபுரங்கள்; இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது; உருது பேசும் இஸ்லாமியர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது; நுழைவுத் தேர்வு இரத்து; மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியது; சேலம் உருக்காலை, சேலம் புதிய இரயில்வே மண்டலம்; நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தெற்காசியாவிலேயே பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவை உருவாக்கம்; மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு; ஏராளமானப் பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை - அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது; இப்படி நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பிதான் முதலமைச்சர் கலைஞர்!

திருக்குவளை என்ற குக்கிராமத்திலிருந்து கிளம்பிய ஒரு இளைஞனுக்குத் தமிழ்நாட்டை எப்படி வடிவமைக்க வேண்டும் என்ற கனவு இருந்தது; ஒரு தொலைநோக்குப் பார்வை இருந்தது. திருவள்ளுவர், தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய மூவரும் அவருக்கு மூச்சுக்காற்றாக இருந்து செயல்பட வைத்தார்கள். இந்த மூவரது கனவுகளை நிறைவேற்றும் மாமனிதராகக் கலைஞர் செயல்பட்டார்கள்.

இலக்கியத்துக்குள் போனால், அவரது குறளோவியமும், சங்கத் தமிழும், தொல்காப்பியப் பூங்காவும் தென்றலாய் வீசுகிறது. கதைக்குள் பயணித்தால், பொன்னர் சங்கரும், தென்பாண்டிச் சிங்கமும் உறுமுகிறது. திரையுலகைப் பார்த்தால், அவரது பராசக்தியும் மனோகராவும் பூம்புகாரும் மின்னுகிறது. நாடகத்துக்குள் நுழைந்தால், தூக்குமேடையும் சாக்ரடீசும், சேரன் செங்குட்டுவனும் ஒலிக்கிறது. அவரது சிற்பத் திறமைகளுக்குச் சான்றாக வள்ளுவர் கோட்டம், குமரியில் 133 அடி வள்ளுவர் சிலையும் எழுந்து நிற்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாடப்புத்தகம் வேண்டுமா? அவரது உரைகள் இருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு இலக்கணம்

வேண்டுமா? அவர் நடத்திய முரசொலி விரிகிறது. அரசியல்வாதிகளுக்கு அரிச்சுவடி வேண்டுமா? அவரது கடிதங்களும், நெஞ்சுக்கு நீதியும் இருக்கிறது. அரசியல் களத்தில் பார்த்தால் அவரால் உருவாக்கப்பட்ட நாங்கள் இருக்கிறோம். அதுமட்டுமல்ல; தன்னை வசைபாடியவர்களையும் வாழ்த்தியவர் அவர்.

இப்படி, கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தின் நிரந்தரத் தலைப்புச் செய்தியாக இருந்த கலைஞர் அவர்கள், 2018 ஆகஸ்ட் 7ஆம் நாள் நிரந்தர ஓய்வுக்குச் சென்று விட்டார். ஓய்வெடுக்கச் சென்றார் என்று நான் சொன்னாலும்கூட, அவர் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏராளமானவற்றைக் கொடுத்துவிட்டுத்தான் ஓய்வெடுக்கச் சென்றிருக்கிறார்.

தான் மறைந்தால், 'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்' என்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே எழுதச் சொன்ன மக்கள் தொண்டர் அவர். 'அண்ணா! நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில், இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா! நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!' என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் உறுதிமொழி எடுத்தவர் அவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சோப இலட்சம் தொண்டர்களின் எஃகு இதயத்தை நம்பி, நாம் கொடுத்த வாக்கை நம்முடைய உடன்பிறப்புகள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு உறுதிமொழி தந்த உடன்பிறப்புகளின் தலைவர் அவர். அவர் பேரறிஞர் அண்ணாவுக்குக் கொடுத்த வாக்கை அவரது தம்பிமார்களாகிய நாங்கள் காப்பாற்றினோம்.

இப்படி தன்னைத் தந்து, இந்தத் தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என இந்த மாமன்றத்தில் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்!.



# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிட கட்டுமான பணி ஆய்வு...



# முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிட கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் நேரில் ஆய்வு...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.08.2021 அன்று தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் விதி எண்.110 இன்கீழ், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை பொதுமக்களும், வருங்காலத் தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில் சென்னை, காமராசர் சாலை, பேரறிஞர்



அண்ணா அவர்களின் நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

இதன் தொடர்ச்சியாக. தமிழ்நாடு அரசு 08.11.2021 நாளிட்ட அரசாணை எண்.144(தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நினைவுச் சின்னங்கள்) துறையின்படி ரூ. 39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவகம் அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கி உள்ளது.

இதன் அடிப்படையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிட வளாகத்தின் கிழக்கு பகுதியில் 2.21 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு கட்டட அமைப்புகள், கண்கவர் பிரதான நினைவிடம், நீர் நிலைகள், பசும் புல் வெளிகள் மற்றும் பூங்கா அமைப்புகள், பார்வையாளர் அரங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய எழில்மிகு செயல் திட்டம் மற்றும் வரைபடங்கள் பொதுப்பணித்துறை கட்டட கலை அமைப்பினால் தயாரிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்த நினைவிடத்திற்கு தேவையான கடலோர ஒழுங்குமுறை ஆணைய அனுமதிகள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட அனுமதி மற்றும் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் வரைபட அனுமதி உள்ளிட்ட அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டு 20.01.2022 அன்று கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன.

இந்நினைவிட வளாகத்தின் பிரதான சதுக்கமானது சுமார் 28 மீ விட்டம் கொண்ட வட்டவடிவிலான அமைப்பினைக் கொண்டது. இச்சதுக்கத்தினை சுற்றி அழகிய நீர்நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்புகள் தலா 28 மீ, 25 மீ மற்றும் 22 மீ விட்டமுடைய அரைவட்ட வடிவிலான வளைவு அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதான அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள வளைவுகளின் வெளிப்புறமானது வியட்நாமில் இருந்து தருவிக்கப்பட்ட சிறந்தவகை வெண்ணிறத்திலான வளைவான பளிங்கு கற்பலகைகளால் அமைக்கப்பட்டுள்ளது. இச்சதுக்கத்தின் தளம் மற்றும் நினைவிட பீடம்

உலகின் மிகச்சிறந்தவகைக் கற்களால் அரிய வேலைப்பாடுகளுடன் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. பிரதான வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பளிங்கு கற்பலகைகளால் ஆன சுவரோவியமானது இரவு நேரங்களில் மிளிரும் தன்மையுடன் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தின் காட்சி அரங்கில் உள்ள கட்டட அமைப்புகள் அனைத்தும் வெவ்வேறு அளவிலான வட்ட வடிவ வளைவுகளால் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வெளிப்புறமானது பிரத்தியேகமான சிறந்த வகை வளைவுகளுடன், இராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து தருவிக்கப்பட்ட உயர் ரக அக்ரியா வெள்ளை நிற பளிங்கு



கற்பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவ்வளாகத்தில் இராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து தருவிக்கப்பட்ட அரிய வகை குவார்ட்சைட் கற்பலகைகளால் தளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ராஜஸ்தானில் கிடைக்கும் மணற்கற்களால் (Sand Stone) செதுக்கப்பட்ட அலங்கார கைப்பிடி அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

நினைவிட வளாகத்தின் நுழைவு பகுதியின் மத்தியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவச்சிலை அழகிய குவார்ட்சைட் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலை அமைப்பு பார்வையாளர்கள் நிழல் படம் எடுக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் இரு மருங்குகளிலும் அமைக்கப்பட்டுள்ள நீர் நிலைகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது தமிழ் எழுத்து தொண்டினைப் போற்றும் வகையில் அவரால் தீட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலப்பதிகாரம் மற்றும் திருக்குறள் உரை ஆகிய நூல்களின் பளிங்கு கற்சிலைகள் அழகிய மேடைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வளாகத்தில் பிரதான அரங்கத்தின் கிழக்குப் பகுதியில் அரைவட்ட வடிவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களை வெளிப்படுத்தும் விதமாக முத்தமிழறிஞர் கலைஞர் அருங்காட்சியகம் சுமார் 20,800 சதுர அடி பரப்பளவில் முழுவதுமாக தரை மட்டத்திற்கு 15அடி ஆழத்தின் கீழ் அமையுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வருங்காட்சியகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வாழ்வின் வெவ்வேறு காலக்கட்டங்கள், கலை மற்றும் அரசியல் துறையில் நிகழ்வுகளின் அரிய நிழல் படங்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அரசியல் பணியின் நிகழ்வுகளை, கடந்த காலத்தின் நிகழ்வுகளை நிகழ்கால பதிவுகளாகச் சித்தரிக்கும் மிகை / மெய் நிகர் தொழில்நுட்ப அனுபவங்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நிழல்படமெடுக்கும் வசதி. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வாழ்வினைப் பற்றிய வினா-விடை,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வாழ்வின் காலகட்ட நிகழ்வுகளை குறிக்கும் திரைச்சித்திரம், 7-D காட்சி அனுபவங்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது எழுத்துக்களால் வடிக்கப்பட்ட நூல்களின் தொகுப்பு மற்றும், மிகை மற்றும் நிகர் மெய்யியல் (AR & VR Concepts), முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய திட்டங்கள் குறித்த விளக்கப்படங்கள் ஆகியவை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. 7-D காட்சி அனுபவமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைப் பயணம் இரயில் பெட்டி அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தின் கூரையின் மேல் மட்டத்தில் பார்வையாளர்கள் அமர்ந்து இளைப்பாறவும், வளாகத்தின் வனப்பையும், கடலின் அழகினையும் வெகுவாக ரசித்து மகிழும் வண்ணம் வசதி செய்யப்பட்டது.

இவ்வளாகத்தில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் எழில்மிகு பசும் புல்வெளிகள், பூங்கா அமைப்புகள், பார்வையாளர் இருக்கை அமைப்புகள், கண்கவர் ஒளிவிளக்கு அமைப்புகளுடன் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அவரின் நேரடிக் கண்காணிப்புப் பார்வையில் 2022ஆம் ஆண்டில் அக்டோபர் 18ஆம் நாளிலும், 2023ஆம் ஆண்டில் ஜனவரி 1, 15 ஆகிய நாட்களிலும், பிப்ரவரி 3ஆம் நாளிலும், மார்ச் 1 , 20, 21 ஆகிய நாட்களிலும், ஏப்ரல் 21ஆம் நாளிலும், மே 7ஆம் நாளிலும், ஜூன் 3, 26 ஆகிய நாட்களிலும், ஜூலை 7, 10 ஆகிய நாட்களிலும், ஆகஸ்ட் 7, 28 ஆகிய நாட்களிலும் மற்றும் 2024ஆம் ஆண்டில் பிப்ரவரி 20ஆம் நாளிலும் பல்வேறு காலகட்டங்களிலும் ஆய்வுகள் மேற்கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடப் பணியினை பார்வையிட்டு விரைவாக முடிக்க ஆலோசனைகளை வழங்கினார்கள்.



# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் பொதுமக்கள் பார்வைக்கு அர்ப்பணிப்பு...



# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் உருவாக்கம்...

2021ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், சென்னை மெரினாவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 110 விதியின்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அதன்படி பொதுப்பணித்துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் மற்றும் செயற்கை நுண்ணறிவு உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகம் பிரம்மாண்டமான முறையில்





அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் மற்றும் புதியதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் ஆகியவற்றின் திறப்பு விழா 26.02.2024 அன்று இரவு 7 மணியளவில் நடைபெற்றது. இந்நினைவிடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

திறப்பு விழா கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளடங்கி உள்ளது.



சென்னை, மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்துக்கு உள்ளே சென்றவுடன் இளங்கோவடிகள், கம்பர் சிலைகள் நம்மை வரவேற்பது போன்று அமைந்துள்ளது. இந்த சிலைகள் அருகே பேரறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்து புத்தகம் படிப்பது போன்ற வெண்கல சிலை நிறுவப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களின் சமாதிக்குப் பின்னால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமர்ந்து எழுதுவது போன்ற வெண்கல சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சமாதியில் 'ஓய்வெடுக்காமல் உழைத்தவர் இங்கே ஓய்வு கொண்டிருக்கிறார்' என்ற வாசகம் தமிழ் மற்றும்


கலைஞர்




ஆங்கிலத்தில் இடம் பெற்றுள்ளது. தனது மறைவுக்குப் பின்னர் இந்த வாசகத்தை தனது சமாதியில் எழுதவேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்கூட்டியே சொல்லி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பாராட்டி திருமதி சோனியா காந்தி அவர்கள் கடந்த 08.11.2005 அன்று எழுதிய கடிதம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கல்வெட்டாக பொறிக்கப்பட்டு அவரது நினைவிடம் அருகே வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தை தனது நினைவிடத்தில் வைக்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டிய கடிதத்தின் கல்வெட்டும் அதன் அருகே வைக்கப்பட்டுள்ளது.

நினைவிடத்தைச் சுற்றிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழி வாசகங்களை கல்வெட்டுகள் தாங்கி நிற்கின்றன.

அவரது சமாதியின் பின்புறம் வியட்நாம் நாட்டின் மார்பிள் கல்லில் அவருடைய உருவம் பிரம்மாண்டமாக பொறிக்கப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இந்தத் தோற்றம் இரவு நேரத்தில் 'லேசர்' மின்னொளியில் ஜொலிக்கும் வகையில் நவீன வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சமாதியை சுற்றிப் பார்த்தவுடன், 20 ஆயிரம் சதுரடியில் அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் உலகம்' என்ற செயற்கை நுண்ணறிவு உதவியுடன்









அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்துக்கான சுரங்கப்பாதை அனைவரையும் ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இதன் உள்ளே நுழைந்ததும் குளுகுளு ஏ.சி. காற்று மனதை வருடுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய புத்தகங்களின் பெயர்கள் 'க' என்ற ஒற்றை எழுத்தில் உள்ளடக்கி பொறிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்துதான் 'கலைஞர் உலகம்' அருங்காட்சியகத்தின் இலச்சினை ஆகும்.

'கலைஞர் எழிலோவியங்கள்' என்ற பெயரில் அறை அமைக்கப்பட்டுள்ளது இந்த அறையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இளமைக்காலம் முதல் முதுமைக்காலம் வரையிலான அரிய புகைப்படங்கள் அலங்கரிக்கின்றன. இதில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகைப்படங்களும் 'அப்பா என்று அழைத்துக்கொள்ளட்டுமா தலைவரே' என்று எழுதிய உருக்கமான கடிதமும் இடம்பெற்றுள்ளது. இது மனதை கலங்க வைக்கின்றது.

உரிமை வீரர் கலைஞர் என்ற பெயரில் ஒரு அறை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறைக்குள் ஆச்சரியம் காத்திருத்திருக்கின்றது. சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை மாநில முதலமைச்சர்களே ஏற்றிடும் உரிமையை பெற்றுத் தந்து, சென்னை, கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உரையாற்றுவது போன்ற காட்சி அமைப்பு AI (Artificial Intelligence) தொழில்நுட்பத்துடன்















இடம் பெற்றுள்ளது. கம்பீரமாக நின்றபடி தனது குரலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசுவது போன்று செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி அமைத்திருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது.

'கலைஞருடன் ஒரு செல்பி' என்ற பெயரில் ஒரு அரங்கு அமைந்துள்ளது. இங்கு கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமர்ந்திருக்கும் தோற்றம் மற்றும் அருகில் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ளலாம். புகைப்படத்தை எடுத்தவுடன் 'டிஜிட்டல்' தொடு திரையில் செல்போன் எண்ணைப் பதிவு செய்தால் அந்த புகைப்படம் சட்டென்று 'வாட்ஸ்-அப்' எண்ணுக்கு வந்து விடும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

கலைஞரின் சிந்தனை' சிதறல்கள் என்ற பெயரில் பிரம்மாண்ட அறை ஒன்றும் அமைந்துள்ளது. இதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசுவது போன்று காட்சி அமைப்புகள் இருக்கின்றன. 'புதிரை வெல் கலைஞர் வழி செல்' என்ற தலைப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப்பற்றிய கேள்விகள் தொடுதிரையில் வருகின்றன. சரியான பதிலை தொடுபவர்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே பாராட்டுவது போன்று குரல் ஒலிக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' உள்பட 8 புத்தகங்களின் தலைப்புகளுடன்









'டிஜிட்டல்' திரை வைக்கப்பட்டுள்ளது. இதில் எந்த புத்தகத்தைத் தொட்டாலும், அந்தப் புத்தகம் பற்றிய விளக்கம் வீடியோவாகத் தோன்றுகிறது. இந்த அறையில் ஒன்பதே கால் அடி உயரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மெழுகு உருவச்சிலையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

'கலையும், அரசியலும்' என்ற தலைப்பில் 79 பேர் அமரும் வகையில் மினி தியேட்டரும் உருவாக்கப்பட்டுள்ளது. 60 அடியில் திரை அமைக்கப்பட்டுள்ளது. இதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாறு 21.45 நிமிடங்கள் குறும்படமாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றது.

கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தில் 'சரித்திர நாயகரின் - சாதனை பயணம்' என்ற தலைப்பில் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 'திருவாரூர்-சென்னை' கலைஞர் எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் இரயில் பெட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பெட்டியில் ஏறி அமர்ந்தவுடன் 3டி கண் கண்ணாடி வழங்கப்படும். எதிரே பெரிய டிஜிட்டல் திரையில் காட்சிகள் ஒளிபரப்பு ஆகும்.

திருவாரூர் இரயில் நிலையத்திலிருந்து இரயில் புறப்பட்டு செல்வது போன்ற உணர்வு ஏற்படும். திருச்சி இரயில் நிலையத்தை கடந்ததும் கல்லக்குடியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் ஒரு பகுதியாக தண்டவாளத்தில் தலை வைத்து படுத்து போராட்டம் நடத்துவது போன்ற காட்சிகள் தத்ரூபமாக இடம் பெற்றிருக்கும்.

திருவாரூர்-சென்னை இரயிலின் வழித்தடம் மதுரை, கோவை, சேலம், இராணிப்பேட்டை, சென்னை சென்ட்ரல் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு இரயில் நிலையத்தையும் இரயில் கடக்கும்போது அந்த ஊரில் கலைஞர் அவர்கள் செய்த திட்டங்கள், சாதனைகள் பின்னணி குரலாக ஒலிக்கும். திருவாரூர் - சென்னை இரயில் பயண காட்சிகள் ஏழு நிமிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிற்கும்



இரயிலில் அமர்ந்தால் உண்மையாகவே இரயிலில் பயணிப்பது போன்ற உணர்வு உண்டாகும் வகையில் தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட திருவள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டம், அண்ணா மேம்பாலம் போன்ற திட்டங்கள் குறித்த புகைப்படங்கள் அருங்காட்சியகத்துக்கு உள்ளேயும், வெளியேயும் செல்லும் பாதைகளில் உள்ள பக்கவாட்டுச் சுவர்களில் பளிச்சிடுகின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் இருந்து மெரினா கடற்கரையின் அழகை ரசிக்கும் வகையில் பூங்கா போன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

பெண்ணிய காவலர், ஏழைப்பங்காளர், நவீன தமிழ்நாட்டின் சிற்பி என்ற தலைப்புகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் பறைசாற்றப்பட்டுள்ளது. கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் திகட்ட, திகட்ட பயன்படுத்தப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நேரில் பழகியது போன்ற உணர்வு உண்டாகும் வகையில் இந்த அருங்காட்சியகத்தின் அரங்குகள் அமைந்துள்ளன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்போல நினைவிடமும் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் செதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.



# அலைகளின் தாலாட்டில்...
# அண்ணனின் தலைமாட்டில்...
# கலைஞரின் நினைவிடம்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் மடல்**



எத்தனையோ நிகழ்வுகளின்போது உடன் பிறப்புகளுக்கு கடிதம் எழுதியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். உங்களைப் போன்ற உணர்வுடன் அந்தக் கடிதங்களைப் படித்தவன்தான் உங்களில் ஒருவனான நான். இம் மண்ணை விட்டுச் சென்றாலும், நம் நெஞ்சில் நிறைந்துவிட்ட தலைவர் கலைஞர் அவர்கள் தன் மரணத்திலும் போராளியாக சுயமரியாதை வீரராகச் சட்டப்போராட்டம் நடத்தி வெற்றியுடன் பெற்ற சென்னை, மெரினாக் கடற்கரையில் அவருக்குரிய இடத்தில், அவரது நினைவிடம் கலைத்திறனுடன் உருவாகிவிருக்கிறது. பிப்ரவரி 26ஆம் தேதி நடைபெறவுள்ள அதன் திறப்புவிழாவுக்கு உடன்பிறப்புகளாம் உங்களை, உங்களில் ஒருவனான நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், தி.மு.கழகத்தின் தலைவராகவும் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.





யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். காரணம். யானைதான் காட்டின் வளத்தைப் பெருக்கும். இயற்கையின் சமச்சீரான நிலையைத் தக்க வைக்கும். பல்லுயிர்ச் சூழலைப் பாதுகாக்கும். யானை வாழ்ந்ததற்கான அடையாளம் அது நடந்து சென்ற பாதை மட்டுமல்ல, அது உலா வந்த காட்டின் பசுமையும் செழுமையும் தான். தமிழ்நாட்டின் தாய் யானையாகத் திகழ்ந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். 95 ஆண்டுகாலம் வாழ்ந்தவர், 80 ஆண்டுகளுக்கு மேல் பொதுவாழ்க்கைக்காகத் தன்னை அர்ப்பணித்தார். இனம் காத்திட போராடினார், மொழிகாக்க சிறை சென்றார். மக்களின் மனங்களை வென்று 5 முறை முதலமைச்சர் ஆனார். இந்திய அரசியலின் தவிர்க்க முடியாதவராக உயர்ந்தார். நவீனத் தமிழ் நாட்டைத் தன் சிந்தனை உளியால் செம்மையுறச் செதுக்கினார். எதிர்காலத் தலைமுறைக்கும் வாழ்வளிக்கும் திட்டங்களை வகுத்தளித்த பிறகே நிரந்தரமாக ஓய்வு கொண்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம், மக்கள் பக்கம் நின்றது. அவர்களின் மனங்களில் குடியேறியது. மாநிலத்தின் ஆட்சியைப் பிடித்தது. அந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மை விட்டு மறைந்த நிலையில் தமிழ் நாட்டின் முதலமைச்சரானார் முத்தமிழறிஞர் கலைஞர்அவர்கள். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் தம்பி என்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயத்தை இரவலாகக் கேட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

"நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில் இரவலாக, உன் இதயத்தை தந்திடண்ணா நான் வரும்போது கையோடு, அதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா"

-என்று இரங்கற்பாவில் இலக்கியம் படைத்தவர் கலைஞர் அவர்கள். சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்பதுதான் தலைவரின் அரசியல் இலக்கணம். சொன்னதுபோலவே, அவர் நிரந்தர ஓய்வெடுத்துக் கொண்ட போது, தன் அண்ணனின் அருகிலேயே உறக்கம் கொண்டார். இலக்கியமாய் நிலைத்துவிட்ட, "இரவல் கேட்ட இதயத்தையும் சொன்னது போலவே. அண்ணா அவர்களின் கால்மலரில் வைத்து வரலாற்றைப் படைத்தார்.

வங்கக் கடலோரம் தமிழ் அலைகள் தாலாட்ட 1960ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் நிரந்தர ஓய்வெடுக்கும்படி இடம் அமைத்துக் கொடுத்தவரே தலைவர் கலைஞர் அவர்கள் தான். ஓங்கி உயர்ந்த தூணும். அணையா விளக்கும் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் சதுக்கத்தை அமைத்தவரும் அவர்தான்.தன்னை அரசியல் களத்தில் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மட்டுமல்ல, அரசியல் களங்களில் மற்போர் போல சொற்போர் நடத்தினாலும் தமிழுகுக்கே உரிய பண்பாட்டுடனும் நாகரிகத்துடனும் மாற்று இயக்கத்தின் தலைவர்கள் மறைந்தபோதும் அவர்களுக்கு நினைவிடம் அமைத்த அரசியல் பண்பாளர் தலைவர் கலைஞர் அவர்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் நினைவிடங்களை அமைத்தவர் கலைஞர் அவர்கள்தான். எமர்ஜென்சி எனும் நெருக்கடிநிலைக் காலத்தில், 1975 அக்டோபர் 2ஆம் நாள் காந்தி பிறந்தநாளன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மரணமெய்தியபோது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களே மழையையும், சகதியையும் பொருட்படுத்தாமல், கிண்டியில் உள்ள இடத்திற்கு இரவு நேரத்தில் நேரில் சென்று. கார் விளக்கொளியில் ஆய்வு செய்து, அந்த இடத்தைத் தூய்மைப்படுத்தும் பணியை, தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு மேற்பார்வையிட்டு, அரசு மரியாதையுடன் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் உடலை எரியூட்டச் செய்து, அந்த இடத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவிடத்தை அமைத்தவர் கலைஞர் அவர்கள்.

இராமாயணத்தைச் சக்கரவர்த்தி திருமகன் என்ற பெயரில் எழுதியவர். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் என்பதனால் அவரது நினைவிடத்தை இராமரின் பட்டாபிஷேக மகுடம் போல அமைத்தவரும் கலைஞர் அவர்கள்தான். மாற்றுக் கருத்துடையவர்களேனும் அவர்தம் மனம் எதை விரும்பியதோ அதனையே நினைவிடத்தின் அடையாளமாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின்

நினைவிடத்தில் முதன்முதலில் குடை போன்ற வடிவமைப்பை அமைத்தவரும் கலைஞர் அவர்கள்தான். பலருக்கும் நிழல் தருபவராக எம்.ஜி.ஆர். இருந்தார் என்பதன் அடையாளம் அது.

தேர்தல் களத்துப் பகையை நெஞ்சில் கொள்ளாமல் தன் காலத்துத் தலைவர்களுக்கு உரிய மரியாதையுடன் நினைவிடம் அமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் விரும்பியபடி கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருகே ஓய்வெடுக்க அன்றைய ஆட்சியாளர்கள் அனுமதி தரவில்லை. தம்பிடி இடம் கூடத் தரமாட்டோம் எனக் காழ்ப்புணர்வைக் காட்டினார்கள். தி.மு.கழகத்தினர் மட்டுமல்ல. ஒட்டுமொத்தத் தமிழ்நாடே கலைஞர் அவர்களுக்கு கடற்கரையில் இடம் ஒதுக்க வேண்டும் எனக் கண்ணீர்க் கோரிக்கை வைத்தது. இரக்கம் சுரக்கவில்லை ஆட்சியாளர்களுக்கு! இரத்தம் கொதித்தது உடன்பிறப்புகளுக்கு! சட்டப் போராட்டத்தைத் தொடங்கினோம். தந்தைக்கு மகன் செய்யும் கடமையாக நினைக்காமல், வந்த தலைவருக்குத் தொண்டன் செய்ய வேண்டிய கைம்மாறாக இதனை முன்னெடுத்தேன். விடிய விடிய நடந்த விசாரணைக்குப் பின், நண்பகல் பொழுதில் நல்ல தீர்ப்பு வந்தது. கடற்கரையில் இடம் ஒதுக்கித் தீர்ப்பளித்தனர் நீதியரசர்கள். தன் அண்ணனிடம் இரவலாகப் பெற்ற இதயத்தை ஒப்படைத்து, சொன்ன சொல் காத்த தம்பியானார் தலைவர் கலைஞர் அவர்கள்.

"ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்" என்று தலைவர் கலைஞர் அவர்களே எழுதித்தந்த தனக்கான கல்லறை வரிகளுடன் கடற்கரையில் அவர் ஓய்வு கொள்ளத் தொடங்கினார். அன்றாடம் ஆயிரமாயிரம் உடன்பிறப்புகள் அங்கே வந்து கண்ணீரைக் காணிக்கையாக்குவது வாடிக்கை. 2021 தேர்தலில் தி.மு.கழகம் பெற்ற வெற்றியை உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் ஓய்விடத்தில் தான் உங்களில் ஒருவனான நானும் காணிக்கையாக்கினேன். தலைவரின் ஓய்விடத்தில் தங்களின் திருமணத்தை நடத்தி, புதுவாழ்வைத் தொடங்கிய வெற்றிகரமான இணையர்கள் உண்டு. பிறந்த குழந்தையைத் தலைவர் கலைஞர் அவர்களின் ஓய்விடத்தில் கிடத்தி குடும்பத்தின் மூதாதையரை வணங்குவது போன்ற வணக்கத்தைச் செலுத்தியவர்கள் உண்டு, மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர் விளிம்புநிலை மக்கள் எனத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சித்திறனால் தங்கள் வாழ்வில் ஒளி பெற்றவர்களின் நன்றி செலுத்தும் இடமாக கலைஞரின் ஓய்விடம் அமைந்தது.

தமிழுக்காகவும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் உயர்வுக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் ஓயாது உழைத்த தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வு கொள்ளும் இடத்தை ஒரு வரலாற்றுச் சின்னமாகக் கட்டியமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் திராவிட மாடல் அரசு அதற்கான செயல்திட்டங்களை வகுத்தது. ஆறாவது முறையாக ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடங்கிய இந்தப் பணி, தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வருவதற்கு முன்பாக நிறைவடைந்துள்ளது. எதையும் தாங்கும் இதயத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொள்ளும் சதுக்கமும் புதுப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இரு பெரும் தலைவர்களால் நம் இனிய தமிழ்நாடு பெற்ற பயன்களை வாழும் தலைமுறையும், வருங்காலத் தலைமுறையும் அறிந்துகொள்ளும் வகையில் அறிவியல் தொழில்நுட்பத்துடன் இணைந்த வரலாற்றுச் சின்னமாக வடிவமைக்கப்பட்டுள்ளன பேரறிஞர் அண்ணா அவர்களும் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் ஓய்வுகொள்ளும் இடங்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் அருகே அமைக்கப்பட்டுள்ள நிலவறையில் பயணித்தால், கலைஞர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் பயணிப்பது போன்ற உணர்வு ஏற்படும். தலைவர் கலைஞர் அவர்களுடனேயே பயணிப்பதுபோன்ற அனுபவம் கிடைக்கும். அவர் பெற்றுத் தந்த செம்மொழித் தகுதி, அவர் உருவாக்கிய கணினிப் புரட்சி, அவர் கட்டமைத்த நவீனத் தமிழ்நாடு, அவருடைய படைப்பாற்றல், அவரது நிருவாகத்திறன், இந்தியத் தலைவர்களின் பாராட்டுதலைப்பெற்ற கலைஞர் அவர்களின் ஆளுமை உள்ளிட்ட அனைத்தும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியை நிறைவேற்ற அல்லும் பகலும் உழைத்த பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு எ.வ.வேலு அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பையும், அவருக்கு உறுதுணையாக இருந்த அரசு அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறையினரின் ஒத்துழைப்பையும் மறக்க முடியாது. தமிழினத்தின் உயர்வுக்கு அயராது உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்காக இரவு, பகல் பாராமல் உழைத்தும், தங்கத்தைப் போல இழைத்தும், கலைநயத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது இந்த நினைவிடம். என்றென்றும் நெஞ்சில் வாழ்ந்து நம்மை இயக்கக்கூடிய தலைவரின் ஓய்விடம் வியக்க வைக்கும் வகையில் உருவாக்கப்பட்டு, பிப்ரவரி 26ஆம் நாள் மாலை 7 மணியளவில் திறந்து வைக்கப்படுகிறது. தமிழ் நாட்டிற்கு ஒளி தந்த ஞாயிறான நம் கலைஞர் அவர்களின்




ஓய்விடம், திறந்து வைக்கப்படும் நிகழ்வில், அவரின் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளாம் நீங்கள் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என உங்களில் ஒருவனான நான் உரிமையுடனும், உள்ளன்புடனும் அழைக்கின்றேன்.

“எழுந்து வா... எழுந்து வா..” என்று கோபாலபுரம் இல்லத்தின் முன்பும், காவேரி மருத்துவமனை அருகே உள்ள சாலைகளிலும் நின்று முழக்கமிட்ட உடன்பிறப்புகள் நீங்கள்தானே..! உங்களின் குரலை இப்போது கடல் அலைகள் அன்றாடம் முழக்கமிடுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்களை எழுந்து வரச் சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வரவில்லை. கலைஞர் அவர்களை எழுந்து வரச் சொல்கின்றன கடல்அலைகள், அவரின் ஓய்வு நிறைவடையவில்லை. தன்னால் வர இயலாவிட்டாலும், தன் உடன்பிறப்புகள் நிச்சயம் வருவார்கள் என்பதைத் தலைவர் கலைஞர் அவர்கள் நன்கு அறிவார். தலைமுறைகள் கடந்த தலைவரான நம் கலைஞர் அவர்கள், தமிழ் அலைகளின் தாலாட்டில், தன் அண்ணனின் தலைமாட்டில் ஓய்வெடுக்கிறார். அவரைக் காண வங்கக் கடலோரம் வருக... வருக... உடன்பிறப்பே...




# தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லா தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.02.2024 அன்று சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லா தலைவர்களாக திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்து,





பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து, பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

உலகத் தமிழினத்தின் மிக உயர்ந்த தலைவராக திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 பிப்ரவரி 3ஆம் நாள் மறைந்தபின் அவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் எதிரில் மிகச் சிறந்த கட்டடக்கலை



வடிவமைப்புடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நினைவிடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டு முதலமைச்சராக 19 ஆண்டு காலம் நல்லாட்சி புரிந்து, தமிழ்நாட்டை வளப்படுத்தி, தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நவீன தமிழ்நாட்டின் சிற்பியாக விளங்கி, உலக வரலாற்றில் உன்னதப் புகழ்ச் சின்னமாகத் திகழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 95ஆம் வயதில் 2018 ஆகஸ்டு திங்கள் 7ஆம் நாள் மறைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் அருகிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

## பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், உலகெங்கிலும் தமிழர்களுக்கெல்லாம் தமிழினத் தலைவர், இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் முத்தமிழறிஞர், கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கெல்லாம் தலைவர், இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி, "என் பாதை, சுயமரியாதைப் பாதை - தமிழின நலன் காக்கும் பாதை - தமிழ் நெறி காக்கும் பாதை - தந்தை பெரியாரின் பாதை - பேரறிஞர் அண்ணாவின் பாதை - அறவழிப் பாதை - அமைதிப் பாதை - ஜனநாயகப் பாதை - இதில் பயணித்தால் மரணமே வரும் எனப் பயமுறுத்தினாலும், அந்தப் பாதையிலிருந்து மாற மாட்டேன்" என்று இறுதிவரை உறுதியோடு வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள்.





எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தினுடைய தலைவர் என்று வாழ்ந்த காலம் முழுவதும் வரலாறாக வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்றவர், இந்தியாவில் இப்படி ஒருவர் இருந்தது கிடையாது; இனி ஒருவர் அவர் இடத்தை அரசியல் களத்தில் பிடிக்க முடியாது என்று போற்றத்தக்கப் பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் அண்ணா நினைவிட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.



## புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தின் சிறப்பம்சங்கள்

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய இருபெரும் தலைவர்களின் இரண்டு நினைவிடங்களும் 8.57 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னைக் கடற்கரை காமராசர் சாலையில் அமைந்துள்ள இந்த நினைவிடங்களின் முகப்பு வாயிலில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் எனும் பெயர்கள் அழகுறப் பொறிக்கப்பட்டுள்ளன. நுழைவு வாயிலை கடந்து உள்ளே செல்லும் வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் படிப்பது போன்ற சிலையும், வலதுபுறம் இளங்கோவடிகள் மற்றும் இடதுபுறம் கம்பர் சிலைகளும், நினைவிடங்களின் முன்பகுதி இருபுறங்களிலும் பழமையான புல் வெளிகளும், இடப்புறத்தில் அண்ணா அருங்காட்சியமும் அமைந்துள்ளன.



"எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது." எனப் பொறிக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில்கொள்ளும் சதுக்கத்தைக் கடந்து சென்றவுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமர்ந்து எழுதும் வடிவிலான சிலையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சதுக்கமும் அமைந்துள்ளன. இச்சதுக்கத்தில், "ஓய்வெடுக்காமல் உழைத்தவர் இங்கே ஓய்வு கொண்டிருக்கிறார்" எனும் வாசகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணப்படியே பொறிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் சதுக்கத்தின் முன்னே இருபுறமும், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், தமிழ்ச் செம்மொழி என ஒன்றிய அரசு ஏற்ற முடிவைத் தெரிவித்துப் பாராட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தக வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. சதுக்கத்தின் பின்புறம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புன்னகை பூத்தமுகம் பொன்னிறத்தில் மிளிரும் வண்ணமும் சுற்றிலும் மின்விளக்குகள் விண்மீன்களாக ஒளிரும் வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளன.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சதுக்கத்தின் கீழே நிலவறைப் பகுதியில், "கலைஞர் உலகம்" எனும் பெயரில் அருங்காட்சியகம் அமைக்கப் பட்டு, கலைஞர் நிர்மாணித்த திருவள்ளுவர் சிலை, குடிசை மாற்று வாரியம் முதலியவை படங்களாகவும், தமிழ்த்தாய் வாழ்த்தும், தமிழ்த்தாய் வாழ்த்து அரசு நிகழ்ச்சிகளில் பாடப்பட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 23.11.1970 அன்று பிறப்பித்த அரசாணையும், தமிழ்த் தாய் வாழ்த்து மாநிலப் பாடல் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.12.2021 அன்று பிறப்பித்த அரசாணையும் அவர்களின் படங்களுடன் இடம் பெற்றுள்ளன.

மேலும், கலைஞரின் எழிலோவியங்கள் எனும் அறையில் கலைஞரின் இளமைக் காலம் முதல், அவர் வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகள், கலைஞரின் படைப்புகள் அவர் சந்தித்த போராட்டங்கள், நிறைவேற்றிய பல்வேறு திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள் அமைந்துள்ளன.

"உரிமைப் போராளி கலைஞர்" எனும் அறையில் – தேசியக் கொடியை மாநில முதலமைச்சர்கள் ஏற்றிட உரிமை பெற்றுத்







தந்த கலைஞரின் வெற்றியைக் குறிக்கும் வகையில் சென்னைக் கோட்டையில் முதன்முதலாக தேசியக் கொடியை ஏற்றி வைத்து கலைஞர் உரையாற்றும் காட்சி, தலைமைச் செயலகத்தின் முகப்புத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, கோபாலபுரம் இல்லத்தில் கலைஞர் அமர்ந்திருக்கும் தோற்றம் அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளவும், உடனடியாக புகைப்படம் கிடைக்கும் வசதியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. அதன் வலப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மெழுகுச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் படைப்புகளான நெஞ்சுக்கு நீதி, குறளோவியம் தென்பாண்டிச் சிங்கம் உள்ளிட்ட 8 நூல்களின் பெயர்கள் மீது நாம் கை வைத்தால் அந்த நூல்கள் பற்றிய விளக்கம் வீடியோவாகத் தோன்றி நமக்கு எடுத்துரைக்கும்.

“அரசியல் கலை அறிஞர் கலைஞர்” எனும் அறையில் சுமார் 20 நிமிடங்கள் கலைஞர் அவர்களின் பிறப்பு முதல் இறுதி நாள் வரையான முக்கிய வரலாற்று நிகழ்வுகள் அருமையான படக் காட்சிகளாக, கலையும் அரசியலும் எனும் தலைப்பில் நம்முன் தோன்றி வியக்க வைக்கும்.

“சரித்திர நாயகனின் சாதனைப் பயணம்” எனும் அறையில், திருவாரூர் முதல் சென்னை வரை இரயிலில் பயணிப்பது போன்ற

உணர்வை நமக்கு ஏற்படுத்தி, தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய இரயில் நிலையங்களைக் கடக்கும் போது, அந்தந்த ஊர்களில் கலைஞர் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகள் காட்சிகளாகத் தோன்றும்.

அறைகளுக்கு வெளியே அமைந்துள்ள நடையில் இருபுறங்களிலும், பெண்ணிய காவலர், ஏழைப் பங்காளர், நவீன தமிழ் நாட்டின் சிற்பி, உலகளாவிய ஆளுமைகளுடன் கலைஞர் முதலான தலைப்புகளில் அமைந்த அரிய புகைப்படங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் தொடக்க விழா நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

அதற்கு நேர் எதிரே- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடன் தோன்றும் அருமையான புகைப்படம் பெரிய அளவில் அமைந்து “மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி” எனும் குறள் தொடரைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. மேலும், இப்பகுதியின் இறுதியில் காந்தவிசையை பயன்படுத்தி அமர்ந்த நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அந்தரத்தில் மிதக்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இச்சதுக்கத்தில் கலைஞர் எழுதிய நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், வரும் வழியில் தமிழர்களின் கலாச்சார மையம், வள்ளுவர் கோட்டம், பாம்பன் பாலம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முகப்புக் கட்டடம், மெட்ரோ இரயில், அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகிய முத்தமிழறிஞர் கலைஞர் படைத்த நவீனங்களின் தோற்றம் வண்ண விளக்கொளியில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிகள் கற்பாறைகளில் தமிழிலும், ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு நம் இதயத்திலும் பதியும் வண்ணம் அருமையாக அமைக்கப்பட்டுள்ளன.

இச்சிறப்புமிக்க பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதிய நினைவிடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

# கலைஞர் என்றாலே போராட்டம்தான்! அவரது இறுதிப் போராட்டத்தின் அடையாளம்தான் இந்த நினைவிடம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒளிபரப்பட்ட காணொலி உரை.

"இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா?"



பேரறிஞர் அண்ணா மறைந்தபோது தலைவர் கலைஞர் எழுதிய கவிதை உயில் இது!

அந்தக் கலைஞருக்கு வங்கக் கடலோரம் வாஞ்சை மிகு தென்றலின் தாலாட்டில் அவரது உயிரனைய அண்ணனுக்குப் பக்கத்தில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் நினைவிடம் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் புது உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அண்ணனும் தம்பியும்தானே தமிழ்நாட்டுக் குடும்பங்களின் தலைப்பிள்ளைகள்! இன்று நாம் பார்க்கும் தமிழ்நாட்டை உருவாக்கியவர்கள்!

நம்மையெல்லாம் இன்றும் என்றும் இயக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு... இதோ உங்களுக்கு சென்னைக் கடலின் கரையில் கண்ணைக் கவரும் கம்பீர நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது!

பதினான்கு வயதில் தமிழ்க் கொடி ஏந்தி அதை 95 வயது வரையில் விடாமல் பிடித்திருந்த கனத்த கரங்களுக்குச் சொந்தக்காரரான தலைவர்





கலைஞரின் முழு வாழ்க்கையையும் இந்த நினைவிடத்தை சுற்றிப் பார்க்கும்போது மொத்தமாய் தெரிந்து கொள்ளலாம்!

தனது வாழ்க்கை வரலாற்றை நெஞ்சுக்கு நீதி என்று ஆறு பாகங்கள் மட்டும் எழுதினார் கலைஞர். இயற்கை இடமளித்தால் ஏழாவது பாகத்தையும் எழுதுவேன் என்று ஊக்கமாகவும் இருந்தார். காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்துச் சென்றது.

வரலாற்றைப் படைக்கும் வல்லமையை அவர் நமக்கு வழங்கிச் சென்றதால் அடுத்தடுத்த பாகங்களில் கலைஞர் இருந்து எழுதி இருந்தால் என்னவெல்லாம் எழுதி இருப்பாரோ, அவை அனைத்தையும் காட்சிக்கு கொண்டு வந்து நிறுத்தும் வகையில் கண்காட்சியாக வைத்துள்ளோம்!

திருவாரூரில் இருந்து கண்களில் கனவுகளோடும் –

நெஞ்சில் ஈரத்தோடும்-

சிந்தனையில் தெளிவோடும்-

கால்களில் உறுதியோடும் கிளம்பிய மு.கருணாநிதி என்ற இளைஞன்தான் –


தன் கையில் அதிகாரம் கிடைத்ததும்-

தனது கனவுகள் அனைத்தையும் தமிழ்நிலத்தில் விதைத்து நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாக மாறினார்.

தன் கையில் இருந்த செம்மொழி எழுதுகோலைச் செங்கோலாக மாற்றி - அவர் உருவாக்கிக் கொடுத்த திட்டங்கள்தான்,

இன்று தமிழ்நாட்டின் நான்கு திசைகளிலும் - எட்டுக் கோணத்திலும் - எதிரில் தென்படுவது அத்தனையுமாகும்!

மக்கள் போராடிப் பெற்ற விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்து முதலமைச்சர்களுக்குத்தான் உண்டு என்ற உரிமையை,




இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்த அகில இந்தியத் தலைவர் அவர்!

கோபாலபுரத்தில் இருந்து அவர் கோலோச்சிய தமிழ் அரசவைக்கு வந்து செல்லாத அகில இந்தியத் தலைவர்களே இல்லை!

கலைஞர் – கலையானவர்! அரசியலுமானவர்!

இரண்டாலும் இயங்கியவர்! இரண்டு உலகங்களையும் இயக்கியவர்!

அவரது பேனா தீட்டிய கதைகள் - கவிதைகள் - புதினங்கள் - நாடகங்கள் - திரைக்கதை உரையாடல்கள் என்பவை எல்லாம் தமிழ் இருக்கும் காலமெல்லாம் இருக்கும் அழியாத காவியங்கள்! எந்த ஆழிப்பேரலையாலும் அழிக்க முடியாது!

ஐந்து முறை முதலமைச்சராக இருந்து அவர் போட்ட கையெழுத்தின் காரணமாகத்தான் தமிழ்நாட்டின் முன்னெழுத்தாக 'மு.க.' என்ற இரண்டெழுத்து உருவானது.

திருவாரூரில் புறப்பட்ட கலைஞர், தமிழ்நாட்டையே திருவூராக ஆக்கினார். தமிழ்நாடே ஆரூரார் உருவாக்கிய நாடாகக் காட்சி அளிக்கிறது!

கலைஞர் போகாத ஊரில்லை; பேசாத நகரில்லை!

தமிழ்மண் பயனுற வாழ்ந்த கலைஞரை எல்லாத் திட்டங்களும் நினைவூட்டியபடியே, அவர் நினைவைப் போற்றும் சின்னங்களாக வானுயர அமைந்து வாழ்த்துகின்றன.

தமிழ்நாட்டுப் பெருந்தலைவர்களுக்கு எல்லாம் நினைவு மண்டபங்கள் எழுப்பிய கலைஞருக்கு, ஆறடி மண் கேட்டுப் போராட வேண்டியதாக இருந்தது.

கலைஞர் என்றால் போராட்டம்! இதுதானே அவரது வாழ்வும், வரலாறும் நானிலத்துக்குச் சொல்கிறது!

போராட்டம் மட்டுமல்ல, கலைஞர் என்றால் வெற்றி என்பதன் அடையாளம் இந்த நினைவிடம்!

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரும் - எதிலும் வல்லவர் என்று தலைவரால் போற்றப்பட்டவருமான திரு. எ.வ.வேலு அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வால் மிகச்சீரிய முறையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது 'கலைஞரின் உலகம்!'

'கலைஞரின் உலகம்' என்ற இந்த நினைவிடம் இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரையில் இருக்கும் முதல் அதிசயம்!

கலைஞர் எனும் உலகத்தால் நாம் சுற்றுகிறோம்... தமிழ்நாடு சுற்றுகிறது... கலைஞர் உலகு ஆள்வார்! உலகம் கலைஞர் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

கலைஞர் நினைவிடத்துக்குள் வாருங்கள், கலைஞர் வாழ்ந்த வாழ்க்கையைக் காணலாம், கலைஞரோடு வாழலாம்... வாழலாம்... வாழலாம்...



# பத்திரிகைகளின் பார்வையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்...



புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவகம் –

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் - பிப்.26 அன்று திறப்பு!



தினகரன்,
23 FEB 2024

# மெரினாவில் கலைஞர் நினைவிடம் வரும் 26ம் தேதி திறக்கப்படும்

பேரவையில் முதல்வர் அறிவிப்பு



THE HINDU
23 FEB 2024

# 'Renovated Anna Memorial and Kalaignar Memorial to be inaugurated on Feb. 26'

The Hindu Bureau
CHENNAI

Chief Minister M.K. Stalin on Thursday told the Assembly that the renovated memorial of DMK founder C.N. Annadurai and the new memorial of late Chief Minister M. Karunanidhi will be inaugurated on February 26 in the city.

He said the government had not printed any invitation for the event because it would only be an event and not a festival. "I invite the members of the ruling party, Opposition, alliance parties, and the people of Tamil Nadu to take part in the event," he said.

தினமணி

23 FEB 2024



தினமலர்

23 FEB 2024

## கருணாநிதி நினைவிடம் 26ம் தேதி இரவு திறப்பு

**சென்னை, பிப். 23–** சென்னை மெரினா கடற்கரையில் கட்டப்பட்டுள்ள கருணாநிதி நினைவிடம், புதுப்பிக்கப்பட்ட அண்ணாதுரை நினைவிடம் ஆகியவை, வரும் 26ம் தேதி திறக்கப்பட உள்ளன. சட்டசபையில், கேள்வி நேரத்தில் நடந்த விவாதம்:

**தி.மு.க. - எழிலன்:** சென்னையில் வள்ளுவர் கோட்டத்தை புனரமைக்கும் பணி எப்போது முடிவடையும்? அங்கு வள்ளுவர் குறித்த சர்வதேச ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** வள்ளுவர் கோட்டம், 80 கோடி ரூபாயில் புனரமைக்கப்படுகிறது. ஒளி, ஒலி வசதி ஏற்படுத்தப்படுகிறது. அடுத்த ஆண்டு ஜூலை மாதத்துள் முடிக்க வேண்டும். ஆனால், பணிகளை விரைவாக முடித்து, விரைவில் முதல்வர் திறக்க உள்ளார். சர்வதேச ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்து, முதல்வருடன் கலந்து பேசி முடிவு செய்யப்படும்.

**எழிலன்:** கருணாநிதி நினைவிடம் எப்போது திறக்கப்படும்?

**முதல்வர் ஸ்டாலின்:** கருணாநிதி நினைவிடமும், புதுப்பிக்கப்பட்ட அண்ணாதுரை நினைவிடமும், வரும் 26ம் தேதி இரவு 7:00 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளன. இந்நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் எதையும் நாங்கள் அச்சிடவில்லை. இதை ஒரு விழாவாக இல்லாமல், நிகழ்ச்சியாகவே நடத்த முடிவெடுத்திருக்கிறோம்.

இந்நிகழ்ச்சியில், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணி கட்சி என, எல்லா கட்சிகளையும் சேர்ந்த எம்.எல்.ஏ.,க்கள் பங்கேற்க வேண்டும். தமிழக மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

இந்து தமிழ் திசை

23 FEB 2024

## கருணாநிதி நினைவிடம் பிப்.26-ல் திறப்பு

### அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கு முதல்வர் அழைப்பு

THE TIMES OF INDIA

23 FEB 2024

# CM invites all to Karunanidhi memorial opening



DT Next

23 FEB 2024

# Karunanidhi memorial to be opened on Feb 26: CM



DECCAN CHRONICLE

23 FEB 2024

# MK memorial to be opened on Monday

DC CORRESPONDENT
CHENNAI, FEB 22:

Chief Minister M K Stalin
invited MLAs from all parties
to take part in the event organ-
ized on Monday, March 26, 7
pm, on the Marina to inaugu-
rate the newly built memorial
of former Chief Minister M
Karunanidhi and also the ren-
ovated memorial of C N
Annadurai, who gave the
name Tamil Nadu to the State.
Making the statement on the
floor of the House on
Thursday, Stalin said that he
was announcing the date and
time of the memorial inaugu-
ration in the Assembly
because he wanted to invite all
the MLAs through the Speaker
for the event, for which no for-
mal invitation had been print-
ed.

The Anna Samadhi has been
an important monument in
Chennai, attracting thousands
of visitors everyday since it
was built following the passing
away for the DMK founder
Annadurai in 1969, and his
acolyte Karunanidhi, the man
who had not lost a single elec-
tion he contested, as Stalin put
it, was laid to rest within the
premises in 2018.

The construction of the
memorial had been going on
since then and it is now ready
for the formal inauguration.
The old memorial of
Annadurai was also renovated
and refurbished in the mean
time and both the monuments
would be inaugurated by the
Chief Minister.

The Anna Samadhi has been
an important monument in
Chennai, attracting thousands
of visitors everyday since it
was built following the
passing away for the DMK
founder Annadurai in 1969.

THE NEW INDIAN EXPRESS
23 FEB 2024



Chief Minister MK Stalin addressing the Assembly on Thursday |

THE NEW INDIAN EXPRESS
23 FEB 2024

## Renovated MK memorial opening on February 26

Chennai: Chief Minister MK Stalin on Thursday invited MLAs of all parties to attend the opening of the renovated memorial for former Chief Minister M Karunanidhi on the Marina on February 26. Responding to a query from Dr Ezhilan (DMK) during the question hour, Stalin said there would be no formal invitation from the government. "I invite all MLAs – those in the ruling party, and in the Opposition and alliance parties to attend the opening of this renovated memorial. I also invite the people of Tamil Nadu for this," he said.



The renovated memorial for former Chief Minister M Karunanidhi on the Marina | D SAMPATH KUMAR



சென்னை மெரினா கடற்கரையில்

## நவீன வசதிகளுடன் உருவான கருணாநிதி நினைவிடத்தின் சிறப்புகள்!



## பிரமிக்க வைக்கும் கலைஞரின் புதிய நினைவிடம்



## உடன்பிறப்புகள் அனைவரும் வர வேண்டும்


25 FEB 2024

# கலைஞரின் நினைவிடம் வரலாற்று சின்னமாகும்

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொண்டர்களுக்கு கடிதம்



# உயிரினும் மேலான உடன்பிறப்புகளே வாருங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!!





மெரினா கடற்கரையில் நவீன தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்ட

கருணாநிதி நினைவிடம் இன்று மாலை திறப்பு!

கருணாநிதி நினைவிடம்...



புதுப்பிக்கப்பட்ட அண்ணா நினைவிடம்

சென்னை மெரினா கடற்கரையில் கருணாநிதி நினைவிடம் திறப்பு




TRINITY MIRROR

27 FEB 2024

## CM opens Kalaignar memorial, features museum & library




27 FEB 2024

## பிரமிப்பை ஏற்படுத்தும் கலைஞர் அருங்காட்சியகம்



பேரறிஞர் அண்ணாவின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம்!

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் - நாளை திறந்து வைக்கிறார்!



தினத்தந்தி

25 FEB 2024

பிரமாண்ட அருங்காட்சியகத்துடன் அமைந்துள்ளது

# மெரினாவில் கருணாநிதி நினைவிடம்

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்



# அண்ணா, கலைஞரின் பிரமிக்க வைக்கும் நினைவிடம்

இந்து தமிழ் திசை
25 FEB 2024

அண்ணா, கருணாநிதி புதிய நினைவிடங்களை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்

THE HINDU
26 FEB 2024

# Karunanidhi's Kallakkudi agitation comes alive at his memorial's digital museum



THE NEW INDIAN EXPRESS
26 FEB 2024

# MK memorial revamped, to be cynosure of all eyes

EXPRESS NEWS SERVICE @Chennai

THE renovated memorial for former chief minister M Karunanidhi has many modern features, including an underground museum, 7D screens, touch screen displays, selfie points, library, highlights of the leader's life, etc. It is being inaugurated by CM MK Stalin on Monday.

Marbles used in some portions of the memorial have been brought from Rajasthan and Vietnam. In front of the memorial, the letter of Congress leader Sonia Gandhi to Karunanidhi, written on November 8, 2005, when Tamil was declared as a classical language is on display. When visitors move on, they enter the underground digital museum called Kalaignar Ulagam (The world of Kalaignar). On the pathway, the statue of Thiruvalluvar, and achievements of Karunanidhi, creative features of Karunanidhi as CM are on display.

Turning right, visitors can view the Thamizh Thai Vazhthu (invocation to Mother Tamil) on the opposite wall, and the G.O. issued in 1970 mandating the recital of this invocation at the beginning of government functions is displayed. Also, the G.O. issued by Stalin on December 17, 2021, declared this invocation as the state verse of Tamil Nadu.

People can take selfies with the statue of Karunanidhi designed as sitting in his Gopalapuram residence. On the touchscreens, one can find information about eight important works of Karunanidhi — including his autobiographic commentary on Tirukkural and his key novels.

There is a static train surrounded by 7D screens. Visitors will feel as if they are travelling on a train from Tiruvarur to Chennai. Photographs of important junctures in the life of Karunanidhi, the struggles he took part and schemes he implemented are also on display.



26 FEB 2024

# கருணாநிதியின் வாழ்க்கை வரலாற்றை பறைசாற்றும் 'டிஜிட்டல்' அருங்காட்சியகம்



THE TIMES OF INDIA

26 FEB 2024

# CM: It took a legal battle to find a resting place for Kalaignar



தினகரன்

26 FEB 2024

மெரினாவில் 8.57 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள

# அண்ணா, கலைஞர் நினைவிடங்கள் இன்று திறப்பு

26 FEB 2024

# உயிரோவியமாக வடிவமைக்கப்பட்ட முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவிடம்



இந்து தமிழ் திசை
26 FEB 2024

# அண்ணா, கருணாநிதி நினைவிடங்கள் இன்று திறப்பு



DECCAN CHRONICLE
26 FEB 2024

# CM INVITES ALL FOR MK MEMORIAL'S LAUNCH

DC CORRESPONDENT
CHENNAI, FEB. 25

The ruling DMK which has started seat allocations to its allies is gearing up for the inauguration of former chief minister M Karunanidhi's memorial at the Marina beach on Monday.

Chief Minister M.K. Stalin wrote an open letter to the cadre asking them to attend the event, avoiding political attacks and comments after a long time. He has invited leaders of all parties including the principal opposition the AIADMK and the BJP and the open letter laid stressed on Karunanidhi building memorials for former chief ministers K. Kamaraj, M.G. Ramachandran and former Madras Presidency premier C. Rajagopalachari who were the political opponents of the DMK. Mr Stalin recalled that Karunanidhi displayed high levels of political culture while constructing memorials for his political opponents.

Without naming the AIADMK, the Chief Minister recalled the struggle to get a place for Karunanidhi memorial at the Marina near that of DMK founder C.N. Annadurai. He recalled that he started a legal battle as he thought it was the duty of a cadre to its leader and won the case. Several DMK cadres are performing their wedding at the memorial and they also place their new-born children near the memorial to seek their leader's blessings, he said.



புதுப்பிக்கப்பட்டுள்ள 'அண்ணா நினைவிடம்'

புதிதாகக் கட்டமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் நினைவிடம்'

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



இந்து தமிழ் திசை

26 FEB 2024

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அரங்குகளுடன்

'கலைஞர் உலகம்' அருங்காட்சியகம் அமைப்பு



தினமலர்

26 FEB 2024

மெரினாவில் 15 அடி ஆழத்தில் கருணாநிதி நினைவிடம்

முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்



27 FEB 2024



27 FEB 2024

புதுப்பிக்கப்பட்ட அண்ணா நினைவிடம்

சென்னை மெரினா கடற்கரையில்

# கருணாநிதி நினைவிடம் திறப்பு

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், நடிகர் ரஜினிகாந்த், தலைவர்கள் பங்கேற்பு



27 FEB 2024

சென்னை மெரினா கடற்கரையில் புதுப்பொலிவுடன்

# அண்ணா, கலைஞர் நினைவிடம் திறப்பு


தினமலர்
27 FEB 2024

# கருணாநிதி நினைவிடம், அருங்காட்சியகம் திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்


THE TIMES OF INDIA
27 FEB 2024

STALIN UNVEILS KALAIGNAR MEMORIAL

# It's Kalaignar's Taj Mahal, says Rajini


தினமணி
27 FEB 2024

# அரிய புகைப்படங்கள்-நவீன அம்சங்களுடன் கருணாநிதி நினைவிடம்

THE NEW INDIAN EXPRESS
27 FEB 2024

# Stalin opens memorials for MK, Anna on Marina

EXPRESS NEWS SERVICE @Chennai

CHIEF Minister MK Stalin on Monday inaugurated the renovated memorials for former Chief Ministers Arignar CN Annadurai and M Karunanidhi on the Marina.

He also unveiled the statues of both the leaders in their memorials and offered floral tributes to them.

The memorials of Anna and Karunanidhi are located close to each other in a total area of 8.57 acres.

The chief minister stopped at every part of the underground museum and witnessed how the life sketches of Karunanidhi were displayed in different modes.



Stalin taking a tour at the memorial |

Actor Rajinikanth who attended the inaugural function, told reporters, "Instead of calling this as Kalaignar's memorial, it would be apt to call this as Kalaignar's Taj Mahal. The entire memorial looks like a dream world. Every aspect of the memorial is excellent."

VCK president Thol Thirumavalavan said, "The achievements of Kalaignar in the film industry and during his political career have been compiled skillfully in the memorial.


How former chief minister MG Ramachandran, legendary actor Sivaji Ganesan, late actor SS Rajendran and others were attracted by the works of Kalaignar, have been displayed."

THE HINDU
27 FEB 2024

# Kalaignar's memorial is a 'first wonder' on the world's second longest beach: Stalin

CM inaugurates the renovated premises on the Marina beachfront that houses the memorials of late leaders C.N. Annadurai and M. Karunanidhi. A museum 'Kalaignar Ulagam' was also opened

The Hindu Bureau
CHENNAI



27 FEB 2024

# கருணாநிதி நினைவிடத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்தார்






DECCAN CHRONICLE

27 FEB 2024

# Anna, Karunanidhi created modern Tamil Nadu: Stalin

CM inaugurates modern memorial for Karunanidhi on Marina


தினமலர்

28 FEB 2024

## கருணாநிதி நினைவிடம் பார்வையாளர்கள் அதிகரிப்பு


27 FEB 2024


தினத்தந்தி

## இது நினைவிடம் அல்ல; நினைவாலயம்!

# முத்தமிழறிஞர் கலைஞர்
# நினைவிட
# புகைப்படத் தொகுப்பு...




முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிட முகப்புத் தோற்றம்






முத்தமிழறிஞர் கலைஞர்
நினைவிட உட்புறத் தோற்றம்





முத்தமிழறிஞர் கலைஞர்
நினைவிட மத்தியத் தோற்றம்





கலைஞரின்
மார்பளவுச் சிலை









அருங்காட்சியகத்தின் நுழைவு வாயில்



அருங்காட்சியகத்தின் கலைஞர் உலகம் நுழைவு வாயில்








அருங்காட்சியகத்தில்
வைக்கப்பட்டுள்ள
நெஞ்சில் நிற்கும் புகைப்படங்கள்





எழிலோவியங்கள் அறையில்
இடம்பெற்றுள்ள கலைஞரின்
அரிய புகைப்படங்கள்





உரிமை வீரர்
கலைஞர் அறையில்
இடம்பெற்றுள்ள புகைப்படங்கள்





போராட்டக்களங்களின்
புகைப்படங்கள்





அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள திட்டங்கள், சாதனைகள்





அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள திரைப்பட வசனங்களும், முரசொலியில் இடம்பெற்ற மடல்களும்



கலைஞரின் சிந்தனை சிதறல்கள் அறையில் இடம்பெற்றுள்ள கலைஞருடன் ஒரு நேர்காணல் நிகழ்வு




கலைஞருடன் ஒரு செல்பி அறையின் தோற்றம்




கலைஞர் உலகத்தில் சரித்திட நாயகனின் சாதனைப் பயணம் என்ற புகைவண்டிப் பயணம்



கலையும், அரசியலும் என்ற தலைப்பில் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கும் மினி தியேட்டர்



கலைஞரின் நினைவிடத்தில் அணையா விளக்கு






மின்னொளியில்
கலைஞர் நினைவிடம்

# பொதுமக்கள் பார்வையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்...

# உலகத்தில் இப்படிப்பட்ட நினைவிடம் ஒரு தலைவனுக்கும் இல்லை...



**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தினை பார்வையிட்ட கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.துரைமுருகன் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது;**

கலைஞர் அவர்களுடைய நினைவகத்துக்கு வந்து இன்னைக்கு ஒரு நிகழ்ச்சிக்கு கோவையிலிருந்து திரளாக வந்திருந்தோம். அதனடிப்படையில் கலைஞருடைய நினைவிடத்திற்கு வந்து பார்த்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் வருகின்ற நேரத்தில் அவருடைய மியூசியத்தில் அவர் வாழ்ந்த வரலாறுகளை திரைப்படமாக காண்பித்த விதம் என்பது உள்ளபடியே இந்தியாவில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலக வரலாற்றில் ஒரு தலைவருக்கு இப்பேற்பட்ட ஒரு அற்புதமான படைப்புகளை தந்திருக்கிறார்கள் தமிழ்நாடு அரசு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞருடைய வரலாறுகளை இப்படியெல்லாம் தமது இளம் வயதில் அரசியலாக இருக்கட்டும், பொது வாழ்க்கையாக இருக்கட்டும், தமிழ்நாட்டிற்காக எப்படியெல்லாம் உழைத்தார் என்பதை திரைப்படமாகவும், அதன் பின்பு ஒரு புகை வண்டியில் பயணிக்கக்கூடிய விதமாக அவருடைய வரலாறுகளை மிகச் சிறப்பாக, இயற்கையாக எப்படி பயணித்து வந்தார் என்பதை ஒரு நிகழ்ச்சியாக நமக்கு தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய ஒவ்வொரு மக்களும் இந்த இடத்திற்கு வந்து பார்க்க வேண்டும். பார்த்து கலைஞரின் புகழை மென்மேலும் சிறப்பிக்கும் வகையாக, உலகத்தில் இப்படிப்பட்ட நினைவிடம் ஒரு தலைவனுக்கும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

# எல்லோரும் பார்க்க வேண்டிய கலைஞர் நினைவிடம்...



**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தினை பார்வையிட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது;**

உள்ளே நுழைந்ததிலிருந்து ரொம்ப அருமையா சுத்தமாக வச்சிருங்காங்க. இடம் எல்லாம் நல்லா இருக்கு. பார்க்கவே பரவசமாக இருக்கு. கலைஞருடைய சரித்திர சம்பவங்கள் எல்லாம் புகைப்படமாகவும், தெள்ளத் தெளிவாக எல்லா இடத்திலேயும் ஒளித்திரை மூலம் பார்க்கிறதுக்கு ரொம்ப ரம்மியமாக இருக்கு. அதிலேயும் குறிப்பா அந்த புகைவண்டியில் போகக்கூடிய அந்த நிகழ்வு பிரமாதமாக இருக்குது. ஒரு நீர் வீழ்ச்சி வந்து போகும்போது அந்த சாரல் அடிக்கிற எபக்ட் கூட ரொம்ப பிரமாதமாக எடுத்திருக்காங்க. ரொம்ப ரசிச்சி பார்த்த கட்டம் அந்த புகை வண்டியில் போறது. அதே மாதிரி அந்த புகை வண்டியில் போனது கல்லக்குடியில் தண்டவாளத்தில் படுத்திருந்த நிகழ்வு வரும்போது நாமே நேரில் போய் அவர்கிட்ட நிற்கிற மாதிரி ஒரு எபக்ட் கொடுத்திருப்பது ரொம்ப பிரமாதமாக இருக்குது. எல்லோரும் கண்டு ரசிக்க வேண்டிய நிகழ்வு. எல்லோரும் இந்த நினைவிடத்தை கண்டிப்பாக பாருங்க. எல்லோரும் பார்க்க வேண்டிய நினைவிடம். இத அமைச்சு கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ரொம்ப நன்றி.

# கலை நயமிக்க கலைஞர் நினைவிடம்...



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தினை பார்வையிட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.சுனில்குமார் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது;

கலைஞர் நினைவிடம் திறக்கப்பட்டது என்பதை அறிந்து அதனை காணவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் எழுந்தது. இங்கே வந்து பார்த்தபோது நான் என்னையே மறந்து போய் கலைஞரின் ஆரம்ப கால கட்டத்திலிருந்து அவர் இந்த நாட்டிற்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து கொண்டு போராடிய போராட்டக் களங்களை பார்க்கும் போது மெய்சிலிர்த்துப் போனேன். புதிய பரிமாணத்தின் தொழிற்நுட்பத்தில் கலைஞர் உலகம் ரொம்ப சிறப்பாக செய்திருக்கிறார்கள். கண்டிப்பாக அனைவரும் பார்க்க வேண்டியது. ரொம்பவே நல்லா இருந்தது. இதனை இத்தனை கலைநயத்துடன் கூடிய இந்நினைவிடத்தினை கட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி.

# கலைஞர் நினைவிடம் ஒரு அரிய பொக்கிஷம்...



**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தினை பார்வையிட்ட தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி சுகன்யா அவர்கள் நம்மிடம் கூறும்போது;**

பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் அவர்களின் நினைவிடமானது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க புண்ணிய ஸ்தலமாக திகழ்கிறது. நினைவிடத்தின் ஆரம்ப நிலையிலிருந்து இறுதியாக வடிவமைக்கப்பட்ட பூங்கா வரை மிகவும் ரம்மியமாகவும் மனதுக்கு ரொம்ப சந்தோசமாகவும் உள்ளது. கலைஞர் நினைவிடம் இது ஒரு அரிய பொக்கிஷமாக நான் நினைக்கிறேன். ஆண்டுகள் பல தாண்டியும் கலைஞருடைய நினைவுகள் என்றும் மக்கள் மனதில் நிறைந்திருக்கும். கலைஞருடைய வரலாறுகளை இவ்வாறு காண்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனதார பாராட்டுதல்களை கூறிக்கொள்கிறேன்.

# பிரமிக்க வைத்த கலைஞர் நினைவிடம்...



**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தினை பார்வையிட்ட சென்னையைச் சேர்ந்த திருமதி மாலதி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது;**

இந்த கலைஞர் நினைவிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்ததை தொலைக்காட்சியில் பார்த்தோம். அப்போதிலிருந்தே இங்க வரணும்னு ரொம்ப ஆசையா இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னாடியே ஆன்லைன்னில் புக் செய்தேன். இங்க வந்து பார்த்தா ரொம்ப ரொம்ப சூப்பராக இருக்கு. கலைஞரைப்பற்றி எனக்கு நல்லா தெரியும். அவருடைய திட்டங்கள் எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். அவரைப்பற்றி எல்லாமே தெரியும். ஆனால் அது இந்த மாதிரி அழகா வரிசைப்படுத்தி, என்பொண்ணுக்கிட்ட காட்டினேன். இந்த மாதிரி திட்டங்கள் எல்லாம் காட்டும்போது அவளே அதைப்பார்த்து பிரமித்து போயிட்டாள். ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கு கலைஞர் எவ்வளவு சாதனை செஞ்சாகூட அடுத்த தலைமுறைக்கு அது தெரியாம போயிட கூடாது. அத மாதிரி இந்த அளவு அடுக்கி முறையாக அவர் என்ன செய்தாருங்கிறதை வீடியோவாகவும் சரி, இந்த மாதிரி புகைப்படமாகவும் வச்சி காட்டியதனால் அடுத்த தலைமுறைக்கு அவர் என்ன செய்தார் என்பது நல்லா தெரிஞ்சிருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு மிக்க நன்றி. எல்லோரும் அவங்க அப்பாவை இப்படி பாராட்டமாட்டாங்க. அந்த அளவு அவங்க அப்பாவை பாராட்டியிருக்கிறாரு. மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு நன்றி.

# கலைஞர் நடத்திய போராட்டங்களை கண்முன்னே கொண்டு சேர்க்கும் நினைவிடம்...



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தினை பார்வையிட்ட சென்னையைச் சேர்ந்த திரு. சிவக்குமார் அவர்கள் நம்மிடம் கூறும்போது;

முத்தமிழறிஞர் கலைஞரோட சமாதியை பார்க்கனும், அதோட கலைஞர் அருங்காட்சியத்தையும் பார்க்கலாம். ரொம்ப நாளாக ஆயிடிச்சி, இன்னைக்கு பார்த்திடலாம்னு வந்தோம். உள்ள வந்தவுடன் நல்லா இருந்திச்சி. எல்லாமே ஆன்லைன் சிஸ்டம். அதுவும் நல்லா இருந்திச்சு. உள்ள வந்தவுடன் அவருடைய போராட்டங்கள் எல்லாம் பார்த்தேன். சில விஷயங்கள் தெரியும், ஆனா வருடம் வாரியாக பார்க்கும்போது நிறைய போராடியிருக்கிறார். அதுக்கப்புறம் அவருடன் நின்று போட்டோ எடுகிறது நல்லாயிருந்திச்சு. போன் நம்பர் போட்டவுடன் மெசேஜ் வருவது மாதிரி பண்ணியிருக்கிறாங்க. போட்டோ வந்திடிச்சி. அதுக்கப்புறம் புகை வண்டிக்கு வந்தோம். புகை வண்டி ஓடுறது ரொம்பவே நல்லாயிருந்திச்சி. தண்ணீர் விழுகிறது, காற்று வருவது, பூவோட வாசம் அந்த மாதிரி நல்லாவே பண்ணியிருக்காங்க. 3டி எபக்ட் நல்லா பண்ணியிருக்காங்க. கலைஞர் பற்றி தெரிஞ்சிருக்கிறதுக்கு இது ரொம்பவே யூஸ் புல்லாக இருந்தது.



# கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் – ஜூன் 2024

## தொகுதி – 3


ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

**மரு. இரா. வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

அச்சிட்டோர்:
**தமிழரசு அச்சகம்**
எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி : 044-22542224 / 22542221
மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tndipr.gov.in

**தமிழரசு**
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு



# தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு